செ.வெ.எண்: 543 8.7.08

<u>செய்திக்குறிப்பு</u>

நகராட்சிகளில் பதவி வகித்த முக்கியத் தலைவர்களின் புகைப்படக் கண்காட்சியினையும் புதுப்பிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தையும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் 08.07.2008 அன்று திறந்து வைத்தார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையரகப் பணியாளர்களின் பணித்திறனை மேம்படுத்த ஏதுவாக நல்ல பணிச்சூழலையும் உள்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தும் பொருட்டு அலுவலகத்தினைப் புதுப்பிக்க 2007ல் பணிகள் தொடங்கப்பட்டன.

நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தினைப் புதுப்பிக்கும் பணி சுமார் ரூ.98.00 இலட்சம் செலவில் பொதுப்பணித்துறை மற்றும் டான்சி நிறுவனம் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

புதுப்பிக்கும் பணியின் ஒரு பகுதியாக இடைநிலைப்பேசி, இணையதளம், கணிணிகள் போன்றவற்றைப் பொருத்த வசதியுள்ள நவீன பணி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பணியாளர்களின் பயன்பாட்டிற்காக படிப்பகம் ஒன்றும், உணவு உண்ணும் அறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலர்களைக் காண வரும் பொது மக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் போன்றோர் அமருவதற்கென பார்வையாளர் அறைகள் இரண்டும் அமைக்கப்பட்டுள்ளன.

சிறப்பு அம்சமாக தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தொடர்புடைய முக்கிய தலைவர்கள் மற்றும் நிகழ்வுகள் குறித்த புகைப்படங்கள் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இப்புகைப்படத் தொகுப்பில் ஈரோடு நகர்மன்றத் தலைவர், ஈ.வெ.ரா.பெரியார், விருதுநகர் நகர்மன்றத் தலைவர், கர்மவீரர் காமராஜ், சேலம் நகர்மன்றத் தலைவர், மூதறிஞர் ராஜாஜி, உள்ளாட்சிகளின் தந்தை என்றழைக்கப்படும் ரிப்பன் பிரபு, 26 ஆண்டுகள் தொடர்ந்து ஊட்டி நகர் மன்றத் தலைவர்/ உறுப்பினராக இருந்த டேவிஸ் ஆகிய முக்கியத் தலைவர்களின் புகைப்படம் மட்டுமின்றி, மகளிர்க்கென்றே வாணியம்பாடி நகராட்சியில் 1941ல் அமைக்கப்பட்டுள்ள பூங்கா, ஐஎஸ்ஒ தரச் சான்றிதழ் பெற்றுள்ள தூத்துக்குடி நகராட்சித் திருமண மண்டபம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து

வைக்கப்பட்ட கிருஷ்ணகிரி நகராட்சிப் பேருந்து நிலையம், ஈரோடு மற்றும் திருப்பூர் மாநகராட்சிகளின் தொடக்க விழா புகைப்படங்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி விக்டோரியா நகர் அரங்கு, மதுரை மாநகராட்சியின் மயான உதவியாளர்களுக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணை வழங்கும் விழாவின் புகைப்படம் போன்றவையும் இடம் பெற்றுள்ளன.

இந்தப் புகைப்படங்களை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்கள். இது தவிர புதுப்பிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தினையும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்களின் பேரவைத் தலைவர் மற்றும் ஆலந்தூர் நகராட்சி நகர்மன்ற தலைவர், திரு.ஆர்.எஸ்.பாரதி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர், டாக்டர்.நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., மற்றும் நகராட்சி நிர்வாக கூடுதல் ஆணையர், முனைவர்.பி.செந்தில் குமார், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தின் இணை ஆணையர் திருமதி. பி. மகேஸ்வரி, கூடுதல் இயக்குநர் திரு.வெ.பிச்சை மற்றும் இதர அலுவலர்களும் உடனிருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.